www.tamilarangam.net

# விடுதலைக் குரல்

**இதழ் எண் : 3**

**வெளியீடு :**

**தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தியப் பார்ப்பனிய வீழ்ச்சியே அனைத்து ஆதிக்கத்தையும் வீழ்த்தும்!

எதைக் காட்டிலும் இந்தியப் பார்ப்பனியம் தன் ஆளுமையை நிலைப்படுத்திக் கொள்ள இருபெரும் ஒடுக்குமுறை வடிவங்களைக் கொண்டிருக்கிறது.

அதில் ஒன்று சாதி எனில், மற்றது மதம்.

இந்த இரண்டும் காலச் சூழலுக்கு ஏற்றபடி, அதன் அணுகுமுறையில் ஒன்றையொன்று மிஞ்சும் ஆளுமை வலிமையைக் கொண்டனவாகவே இருக்கின்றன. இவை இரண்டும் ஒன்றையொன்று தழுவிய நடைமுறையைக் கொண்டவை. இரண்டும் ஆளுமையர்களால் கட்டிக் காக்கப்பட்டு, வளர்க்கப்படுவனவாகவே உள்ளன.

ஒவ்வொரு மதமும் அம் மதம் சார்ந்த மக்களை ஒன்றிணைப்பது போன்ற மயக்கத்தில் ஆழ்த்தி வகுப்பு, சாதி போன்ற பிறவகைகளில் வேறுபடுத்தி, சமூக அளவில் ஆளுமை செய்கின்றன. சாதி, பல்வேறு மதங்களைச் சார்ந்த மக்களை அதனதன் சாதி வழி ஒற்றுமைப்படுத்தி வகுப்பு, மதவழிகளில் வேறுபடுத்தியும் கூறுபடுத்தியும் ஆளுமை செய்கின்றது.

இரண்டின் ஆளுமையும் வெவ்வேறு தளங்களில் இருந்தாலும் இவ் ஆளுமைகள் ஒன்றையொன்று மறுத்துவிடாதபடியே இயங்க வைக்கப்படுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆதிக்கர்களின் அரசின் இத்தகைய ஆளுமைச் சூழ்ச்சிக் கருத்தியலை விளங்கிக் கொள்ளாமல் இவ் அடிமை மக்களின் விடுதலைக்குப் போராடுவது இயலாததே.

சமூக ஏற்றத் தாழ்வுகளை நிலைப்படுத்திக் கொள்ள வல்லரசியத்திற்குக் கிடைத்த பெரும் ஆதிக்கக் கூறு 'சாதி'. எனவே, நிலவுடைமை ஆளுமையின் சின்னமான சாதியை வல்லரசியம் தன்னுடைய ஆளுமைப் போக்கில் அழிக்க விரும்பாமல் தன் ஆளுமைக்கான கூறாகவும் அதை நிலை நிறுத்திக் கொண்டது.

தமிழகத்தில் சாதிய நிலவுடைமை என்பது சாதிய முதலாளியமாகவும் நீளத் தொடங்கியது. உழைக்கும் மக்களின் எழுச்சிகள் சாதியைக் கொண்டு உடைக்கப்பட்டன. தமிழகத்தில் நடந்த பல்வேறு தொழிலாளர்களின் போராட்டங்களும் உழவர்களின் போராட்டங்களும் உடைக்கப்பட்டதை இதற்குச் சான்றாகச் சொல்லலாம். எனவே உழைக்கும் மக்களின் எழுச்சிக்குச் சாதி பெருந்தடையாகவே அமைந்திருக்கிறது.

சாதி வழியான தீண்டாமைக் கொடுமைகளைச் சிலவேளைகளில் முதலாளியம் மறுக்கவோ, எதிர்க்கவோ செய்தாலும் ஒட்டுமொத்தச் சாதியையும் ஒழிக்க அது முனைப்புக் காட்டுவதில்லை. காரணம் சாதி தனித்ததான ஒடுக்குமுறை வடிவமாக நின்றுவிடவில்லை. அது இந்து மதத்தின் பார்ப்பன வேதங்களின் ஆளுமைக் கருத்தியலோடு - அதன் நலன்களோடு இணைக்கப் பட்டுள்ளது. பார்ப் பனியத்தின் வர்ணப்படுத்தலுக்கு ஓரளவு ஒத்தத் தன்மையிலேயே சாதி இருந்ததால் வர்ணப்படுத்தங்களாக் கப்படாத சூழல்களில் சாதியம் முழுமையாய்ப் பார்ப்பனிய ஆளுமைக் கருத்தியலோடு பிணைக்கப்பட்டது.

www.tamilarangam.net

தமிழகத்தில் உள்ள சைவ மடங்கள் சைவக் கருத்துகளைப் பேசினாலும், அவை சாதிவழித் தீண்டாமையைச் சீர்திருத்தும் பணிகள் சிலவற்றை மேற்கொண்டாலும், அவை இந்துக் கட்டமைப்பையே அடிப்படையாக எண்ணுகின்றன. வருணத் திமிரொழுக்கத்தை மறுப்பதில்லை.

முதலாளியத்தையும், அதன் வளர்ச்சியையும் வாயாரப் புகழ்ந்து ஏற்றுக் கொண்டு இத்தகைய பழமைவாத ஆளுமை வருணத் திமிரொழுக்கத்தையும் விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு வருகின்றனர்.

முதலாளித்துவம் செய்வது போலவே, பார்ப்பனிய இந்து மத மடாதிபதிகள் தீண்டாமையை மட்டும் பாவப்படுவதற்கான செய்தியாகப் பார்த்து - அதை மறுப்பதற்கு அனைவரிடமும் அன்பு செலுத்துவதாகக் கூறலாயினர். ஆனால், சாதி ஒழிய வேண்டும் என்பதிலோ, கூடாது என்பதிலோ அவர்களுக்கு உடன்பாடில்லை.

ஒரு பக்கம் தாழ்த்தப்பட்டோருக்கு உதவுவது போல் சங்கர மடமோ 'ஜனக்கல்யாண் ஜனஜாக்ரன்' - என்று அமைப்புகளை உருவாக்கினாலும் அடிப்படையில் பார்ப்பனியக் கட்டமைப்பைச் சிதையவிடாமல் பார்த்துக் கொள்கின்றது.

எனவே, முதலாளித்துவமும், சாதியமும் உறவு கொண்டது போலவே, இந்தியப் பார்ப்பனியத்தின் மதமும் சாதியமும் உறவு கொள்ளத் தொடங்கின. ஒடுக்கப்பட்டோரின் மீதான ஒடுக்குமுறைகள் இடையிடையே வெளிப்படுகிறபோது சாதியத்தின் தீண்டாமை வழிப்பட்ட செய்திகளை மட்டும் மறுத்து சீர்திருத்தம் பேசுகிறவர்களான

www.tamilarangam.net

மடாதிபதிகள் மீண்டும் சாதியை நிலைநிறுத்தி அதைப் பார்ப்பனிய இந்துமதத்தோடும், முதலாளியக் கட்டமைப் போடும் பிணைக்கவுமான வழியமைக்கவே செய்தனர்; செய்கின்றனர்.

எனவே, சாதி ஒழிப்பு என்பது எவ்வாறு - இம் முதலாளியக் கட்டமைப்பை அ்தாவது இன்றைய இந்தியத் தரகு முதலாளிய அரசக் கட்டமைப்பை எதிர்க்க வேண்டுவதில் கட்டாயமாகிறதோ அதே அளவு இந்தியப் பார்ப்பனிய மதவியல் கட்டமைப்பையும் எதிர்க்க வேண்டுவது கட்டாயமாகின்றது. சாதி ஒழிப்புப் போர் என்பது இந்தியப் பார்ப்பனிய - சாதிய - தரகு முதலாளிய நிலவுடைமையை எதிர்ப்பதிலேயே நிறைவு கொள்ள முடியும்.

அவ்வகையில், இந்தியப் பார்ப்பனியத்திற்கு வேராய் வளர்க்கப்பட்டிருக்கிற அதை நிலைநிறுத்துகிற பார்ப்பனிய இந்துமதக் கட்டமைப்பை எதிர்ப்பதிலுமே அது முழு நிறைவடைய முடியும்.

எனவே, பார்ப்பனிய இந்துமதக் கட்டமைப்பு என்பது எது? அது வெறுமனே மதம் சார்ந்ததா? அதற்கும் மற்ற மதங்களுக்கும் ஆன உறவு என்பது எப்படி? இந்துமத எதிர்ப்பு என்பதும் மற்ற மதங்களின் எதிர்ப்பு என்பவையும் எவ்வாறு என விளக்கம் கொள்ள வேண்டுவது மிகமிகத் தேவையானதாகின்றது.

தொடக்கக்கால வாழ்முறையை அடிமைச் சமூக அரசு தன் நலனுக்கு உகந்த நிறுவனமாக்கிப் படிப்படியே மதமாய் உறுதிப்படுத்தியது. அந்நிறுவன வழிப்பட்ட வாழ்வியல் முறைகள் படிப்படியாக ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தத்துவ வழிப்பட்டதாகவும் நெறியமைக்கப்பட்டது.

மாந்த குலத்தின் - உயிர்களின் வாழ்நிலையின் தோற்றம் - இருப்பு - அதன் முடிவு இவற்றைப் பற்றிய கற்பனையான முடிவுகளையே மதவியலாளர்கள் 'தத்துவம்' என்கிற பெயரில் பரப்பி அதற்கென மக்களின் வாழ்க்கை அவலங்களையும் இருப்புகளையும் மாயையானது என்றும், அதையே உண்மை என்று கூறியும் நிலைப்படுத்திப் பரப்பினர். இருக்கிற சமூக இருப்பை இருக்கிறபடியே ஏற்று வாழ மதம் போதனை செய்கிறது.

இவ்வுலக நடப்புகள் கடவுள் வழி நிகழ்வுகளாக இருப்பதாகவே மதங்கள் வலியுறுத்துகின்றன. இருக்கிற இருப்பில் மாற்றம் தேடுவதுகூட கடவுளின் வேண்டுகை வழியாகவே நிகழும் என நம்ப வைக்கிறது. கடவுள் என்கிற படைப்பாளிக்குக் கட்டுப்பட்டதாக உலகை எண்ணுகிற வகையில் மதங்கள் கருத்தறிவிக்கின்றன. சில மதங்கள் உயிர் பற்றியும், உயிர்களின் தொகுப்பாற்றல் குறித்தும், இயங்கு போக்குகளிலும், படைப்புத் தன்மைகளைச் சில வகையில் மறுத்தாலும், சமூக இருப்புகளான ஏற்றத் தாழ்வுகளை, ஆண்டை அடிமைத்தனங்களை அதற்கான காரணிகளை ஆய்வு செய்வதும் இல்லை. அவற்றை எதிர்த்துப் போராடுவதும் இல்லை. சில சீர்திருத்த மதங்கள் அவற்றை அன்புவழியே மாற்றக் கூறுகின்றன. எனவே, ஏற்றத் தாழ்வைப் பேணுகிற அரசு, மதங்களின் இத்தகைய கருத்துகளைப் பெரிதும் வரவேற்கவே செய்கின்றன. வளர்ந்து வருகிற அறிவியல் வளர்ச்சியை முதலாளியம் எப்படித் தன் ஆளுமை நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றதோ, அதே போல் மதமும் அறிவியலை இத்தகைய தன் கருத்தியல் பரப்பலுக்காகப் பயன்படுத்திக்

www.tamilarangam.net

கொள்ளுகின்றது. இவ்வகையில் மதம் செயல்படுவது முதலாளியத்தை - அதன் அரசக் கட்டமைப்பை வாழ்விக்கவே செய்வதால் அரசும் - அம்மதத்தைத் தம் நலனுக்கென வாழ்விக்கிறது.

ஆக, மதம் இக் குமுக ஆளுமை வெறித்தனங்களை - கடவுளின் பெயரால், மதத்தின் வழியே காக்கிறது. அயோக்கியத்தனங்கள் ஒழிந்துபோகக் கடவுளை வேண்டச் சொல்லுகிறது. இத்தகைய போக்கு கொண்ட மதங்கள் தமிழகத்தில் என்னென்னவாக இருக்கின்றன என்பதை நாம் பார்த்திடல் வேண்டும்.

சில காலத்திற்கு முன்புவரை கூட, இந்துமதம் என்றொரு மதம் இருந்திடவில்லை. தமிழகத்தில் மட்டுமல்லாமல், வேறெங்குமேகூட அவ்வாறான மதம் என்று ஒன்று இல்லை. தமிழகத்தைப் பொறுத்த அளவில் சிறு தெய்வ வழிபாடுகளிலிருந்து வளர்க்கப்பட்டு மதமாக உருவாக்கப் பட்ட நிலையில் சைவ மதமும், வைணவ மதமும் மட்டுமே இருந்தன. அதேபோது ஆரியப் பார்ப்பனர்களின் சூழ்ச்சி யாலும் ஆளுமையாலும் நலிவுறவவும், விரட்டியடிக் கப்படவும் செய்யப்பெற்ற பௌத்த, சமண அறவியலாளர்கள், அன்றைய தமிழ்நிலம் நோக்கி நிறைய வரலாயினர். அதற்கு முன்பாகவே வணிகத்தோடு ஒட்டியும், தனித்தே மதம் பரப்பும் நோக்கிலும் பௌத்தக் கருத்தியல்கள் தமிழ்நிலத்துள் நுழைந்தும், பௌத்த, சமண மதவியலாளர் களைத் தொடர்ந்தும், அவர்களை விரட்டி வந்தபடியும் தமிழகத்துள் புகுந்த ஆரிய வைதிகம் இங்கிருந்த சைவ, வைணவத்தைத் துணை சேர்த்து - பௌத்த சமணங்கள் இங்கு நிலைகொள்ளாத வகையில் அவற்றைக் கடுமையாக எதிர்த்தன.

www.tamilarangam.net

சைவ, வைணவ மதச் சார்புடைய அரசுத் துணையுடன் ஆரிய வைதிகம் கொண்ட உறவு தம் வைதிக மதத்துள் சைவ, வைணவத்தைக் கரைக்கிற தொடக்க முயற்சியாகவும், பௌத்த சமணப் பள்ளிகளை அழிக்கிற கொடுங் காலமாகவுமே இருந்தன. இக்கால வரலாறுகள் மறைக்கப் பட்டன. இருண்ட காலமாய்ப் பின்னால் அறிவிக்கப் பட்டன.

இந்து மதங்களுக்கான குரவர்கள் என்று சொல்லப் பெற்ற அம் மதத்தின் கருத்துப் பரப்புநர்கள் - மக்களின் வழிபாட்டுக்குரியவர்களாயினர். அவர்களின் கருத்து வழியே இறைவனை வேண்டுவது என்பதே விடுதலையானது என்பதான கருத்துகள் பரப்பப்பட்டன.

சைவ, வைணவ மதப் பற்றாளர்களாக இருந்த அரசர்கள் அம்மதக் குரவர்களைப் பெரிதும் உயர்வுபடுத்தலாயினர். அவர்களின் கருத்துகள் மக்களிடையே பரவ ஏற்பாடுகள் செய்யலாயினர்.

மதத்தின் கருத்துகள் பரப்பப்படுவதில் தங்கள் ஆதிக்கங்கள் நிலைபெறுவதை அரசுகள் உணர்ந்தன. எனவே ஒவ்வோர் அரசும் அது சார்ந்த வகுப்பின் அடிப்படையிலான மதங்களை - மதக் கருத்துகளை - மதக் குரவர்களைப் பேணுவதில் பெரும் அக்கறை கொண்டன.

நாளடைவில் ஒவ்வோர் அரசுக்கும் நிழலாய் இருந்த மதம் அந்த அரசையே தாங்குகிற மரமானது. அரசை மதம் தாங்குவதாகவும், மதத்தை அரசு பேணுவதாகவும் மாறியது. நிலவுடைமை அரசுகள் மத நிழலிலேயே வளரத் தொடங்கின. தானே ஒரு குறிப்பிட்ட மதப் பரப்புதலை மேற்கொண்டது. கோயில் கட்டுவது மதவழிப் பூசைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

செய்வது எல்லாம் அரசு வழியாகவே நடந்தன.

எனவே அவ் அரசு ஏற்ற மதத்திற்கு மாற்று மதம் என்பதுகூட அனுமதிக்கப்படாமல் எதிர்க்கப்பட்டது. எனவே மத எதிர்ப்புகள் - ஏறத்தாழ அரசுகளுக் கிடையிலான போர்களாகவே நிகழத் தொடங்கின.

ஆனால் முதலாளிய அரசமைப்பு தானே மதம்பரப்பும் நேரடிச் செயலைக் கொண்டிருக்கவில்லை. அது முதலாளிய நலன் பேணுமளவில் மட்டும் மதத்தை ஏற்றுக் கொண்டது. மதவழிப்பட்ட மூடத்தனங்களைத் திறனாய்கிற கல்வியை முதலாளித்துவம் ஒரு பக்கம் கொடுத்தாலும் - இன்னொரு பக்கம் - பாட்டாளிகளை வேறுபடுத்துவதற்கும், அவர்களின் சமூக, அரசியல், பொருளியல் - பற்றியதான கவனத்தைச் சிதைப்பதற்கும் மதவியல் பரப்பல்களை அங்கீகரித்தது.

வணிக வழி ஒவ்வொரு புது அரசும், அது சார்ந்த மதமும் வளரத் தொடங்கும் போதெல்லாம், முன்னர் நிலவிக் கொண்டு இருந்த மதங்களுக்குள் ஒரு சமரசப் போக்கு உருவானது.

வணிகத்திற்காக நுழைந்த வல்லரசு படிப்படியாகத் தொழிலகங்களை நிறுவி - நிலவுடைமையுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு ஓர் அரசை உருவாக்கிக் கொண்டபின், வல்லரசியத்தை நிலவுடைமை எதிர்க்கமாட்டாமல் எவ்வாறு இணங்கிக் கொண்டதோ, அவ்வாறு மதங்களும் பெரிய அளவில் முரண்படாமல் இணங்கிக் கொண்டன. இவ் இணக்கப் போக்கு அரசு அளவில் ஆளுமையில் பங்கு கொடுத்தது. நிலவுடைமை சார்ந்தோரும் அரசுப் பணிகளில், கல்வியில் பங்காற்றத் தொடங்கினர்.

இந்நிலையில், இதன்வழி வல்லரசிய நிலவுடைமை

www.tamilarangam.net

அரசுக்குள் ஊடுருவித் தம்மின் வருணாச்சிரமக் கொள்கையையும், பார்ப்பனியத்தின் ஆளுமையையும் நிலைநிறுத்திக் கொள்ள ஆரியம் முயற்சி செய்தது. அது நாடோடி வகுப்பின் பண்பில் தொடங்கிப் பின்னர் ஆளுமை வகுப்புக்கான சூழ்ச்சியிலேயே தன்னை நிலை நிறுத்திக் கொண்டது. தங்களை, தங்கள் மொழியைத் தேவ நிலைக்கு உயர்ந்தது என்று அறிவித்துக் கொண்டது.

தங்களின் வேத மதத்தை, வருணாச்சிரமத்தைச் சாதியின் பெயரால் நடைமுறைக்குக் கொண்டு வருகிற முயற்சியையே அரசு வழிச் செய்தது. சிவனியமும், மாலியமும் இருந்த தமிழகத்தில் 'பிராமணியம்' என்றும் 'பிரம்மத் தத்துவம்' என்றும் கூறி ஆரியப் பார்ப்பனர்களையே தேவர்களாக - கடவுள்களாக ஏற்கச் சொல்லி வருணத் திமிரொழுக்கத்தை இங்கு நிலவிய சாதியின் பெயரால் நடைமுறைப்படுத்தியது. தம்மின் இத்தகைய போக்கு, நிலவுடைமை ஆக்கிரமிப்பு நோக்கங் கொண்ட இசுலாமியப் படையால் வீழத் தொடங்கினாலும் - தொடர்ந்து ஆங்கில வல்லரசியச் சார்புடனேயே தம்மை இந்திய ஆளும் வகுப்பாக உருமாற்றிக் கொண்ட ஆரியப் பார்ப்பனியம், மதவியல் நிலையில் வேத வைதிக மதம் எனப் புதுவேடம் புனைந்து கொண்டது.

இசுலாமிய அரசுக்கு எதிராகவும், ஆங்கில அரசுக்கு எதிராகவும் தம்மின் ஆளுமையை நிலைநிறுத்த வேண்டிய தேவையைக் கொண்ட ஆரியப் பார்ப்பனியம் இங்குள்ள பிற மதங்களை வேத வைதிக மதக்கட்டமைப்புக்குள் அடக்கிக் கொண்டது.

அப்படி முனைந்த ஆரியப் பார்ப்பனியத்திற்கென்று

www.tamilarangam.net

காக்கப்பட வேண்டிய தேசிய நலன் ஏதும் இல்லாததால் இல்லாத புதிய தேசத்தையே அது உருவாக்கியது. பல்வேறு மொழி, இனநிலையில் வேறுபட்ட மக்களினத்தைக் கட்டாயத்தில் இணைத்து 'ஹிந்துஸ்தான்' என்கிற புது தேசியத்தைக் காட்டி ஒருங்கிணைத்தது. அவ்வொருங் கிணைப்புக்கு மொழியோ, இனமோ, நிலமோ, அரசியலோ, பண்பாடோ வேறெதுவுமோ காரணிகளாக அமைந்து விடவில்லை.

அத்தகைய ஒருங்கிணைப்புக்கு 'இந்துத்துவம்' - என்கிற வேத-வைதிக மதத்தின் புதுவேடமே ஒரு காரணியாய் நின்றது.

தன்னின் நீண்டகால ஆளுமையை மீட்டெடுக்கவும் நிலைநிறுத்தவும் இஸ்லாமிய ஆளுமை அரசுருவாக்கத்தை முதன்மை நிலையில் எதிர்மைப்படுத்தி வேத வைதிகம் 'இந்துஸ்தானை' உருவாக்கியது. அந்த 'இந்துஸ்தானின்' இணைப்பு அரசியல் 'இந்துத்துவ'மாகவே இருந்ததால் - ஆரியப் பார்ப்பனியத்தின் அந்த இந்துத்துவ உருவாக்க முயற்சி மெல்ல மெல்ல நடந்தது.

வேத-வைதிகம் 'இந்துத்துவ' வேடம் புனைந்தவுடன் இந்தத் தேசங்களில் இருந்த அதற்கு முந்தைய அனைத்துச் சிறு மதங்களையும் அதற்குள் அடக்குகிற முயற்சியையே செய்தது. அனைத்தையும் உட்செரித்துக் கொண்டு - அவை ஒவ்வொன்றின் இணைப்புக்கும் முன்பிருந்த தன் பழைய புராணக் கதையளப்புகளைப் புத்துருவாக்கம் செய்து வெளிப்படுத்திக் கொண்டது.

ஆனால், இதற்கான எதிர்ப்புகள் சைவத்திலிருந்தும், வைணவத்திலிருந்தும் வலுவானதாக இருந்திடவில்லை.

இராமலிங்க அடிகளார் போன்ற புதிய நிலை சைவ மீட்டுருவாக்குநர்களின் அழுத்தமான செயல்களை உட்செரிக்க முடியாமல் 'இந்துத்துவம்' தவித்த போது அவர்களையே சாகடித்தது.

மறுபக்கத்தில், அன்றைக்கு மக்களிடையே எழுந்திருந்த ஆங்கில எதிர்ப்புணர்வைத் தனக்கானதாகப் பயன்படுத்தி ஆரியப் பார்ப்பனியம் பின்னுக்கு நின்று 'பிரம்ம சமாஜத்தை' (1818) உருவாக்கியது.

கிருத்துவ எதிர்ப்பையும் காட்டி - ஹிந்துத்துவம் வளர்க்கப்பட்டது. சமஸ்கிருதத்தைப் பொதுமொழி எனச் சொன்னது. தொடர்ந்து ஆரிய சமாஜம், (1875) தியோசபிகள் சொசைட்டி (1875), ஹிந்து மகாசபை (1885) என்று பல அமைப்புகள் ஹிந்துத்துவத்தை வளர்க்கப் பல்வேறு கோணங்களில் செயல்பட்டன.

"அரசியலை இந்து மயமாக்கு!
இந்துமதத்தை இராணுவமயமாக்கு!"

- என்று முழங்கத் தொடங்கின.

இறுதியாய்த் தொடங்கப்பெற்ற ஆர்.எஸ்.எஸ். (1925-இல்) ஆரியப் பார்ப்பனியத்தின் முழு ஆளுமையையும் கொண்டுவர வேண்டுமான முயற்சியில் தொடர்ந்து அனைத்து இந்துத்துவ முயற்சிகளையும் தம் அமைப்பினை மையமாக வைத்து ஒருங்கிணைக்கத் தொடங்கியது.

ஒரு பக்கம் ஆங்கிலக் காலனியத்திற்கு எதிராக வன்முறை இயக்கம், மற்றொரு அரங்கில் ஆங்கில அரசுடன் பொருளாதாரக் கூட்டு, (Hindustan-Lever, Ashok-Leyland, Lipton-Laoji)

www.tamilarangam.net

ஒரு பக்கம் ஒழுக்கம் - அமைதி என்பதான போலிமைச் செயல், மறுபுறம் முழுக்க வன்முறையால் மதக் கலவரம்.

ஆக-இந்துத்துவத்தை உருவாக்க - சிந்தனை அளவில் வெறி கொள்ள வைக்க - ஆர்.எஸ்.எஸ். ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட மதக் கலவரங்களை உருவாக்கியது.

'ஹிந்துஸ்தானின்' - உருவாக்கத்திற்கு இந்துத்துவம் - என்கிற அரசியலைக் கலவரங்கள் மூலம் எழுதிக் காட்டியது.

'பாரதம்' என்பதைப் பழம் பெருமை கொண்டதாகவும் - அதன் அரசியலை மதத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் காட்டி, இந்து மதத்தை வலுப்படுத்துவது என்பதே ஹிந்துஸ்தான் என்கிற பாரதத்தை வலுப்படுத்தும் என்ற வகையில் செயல்படத் தொடங்கியது.

எனவே, ஆரியப் பார்ப்பனியம் காட்டிய இந்துஸ்தானிற்கு அடிப்படை மதமாகிப் போனதால் - அம் மதவழியான முதன்மை எதிரியாக இசுலாத்தும், கிறித்துவமும் ஆயின.

இனவழிப்பட்டு ஆரியச் சார்பு நாடான ஜெர்மனியின் துணையுடன் ஆங்கிலேயரை எதிர்த்து ஹிந்துஸ்தானை உருவாக்க எண்ணிய ஆரியப் பார்ப்பனியத்தின் திட்டங்கள் உலக அரசியல் சூழலாலும், சில நடைமுறைச் சிக்கலாலும் சரிவராமல் போய்விட்டது. எனவே, பொருளியல் அளவில் ஆங்கில வல்லரசிய உறவுடனேயே ஹிந்துஸ்தானைப் படைக்கிற முயற்சியில் ஆரியப் பார்ப்பனியம் முயன்றதால் - அதன் முதன்மை எதிரியாக இஸ்லாத் என்றபடியே வகுத்துக் காட்டியது.

இஸ்லாத் எதிர்ப்பு என்பது எளிதே இந்துத்துவ

www.tamilarangam.net

வளர்ச்சிக்கும், ஹிந்துஸ்தானிய உருவாக்கத்திற்கும் பயன்பட்டது. ஆக, அத்தகைய உருவாக்கத்தின் தொடர்ச்சி இன்றும் நீண்டுகொண்டே போகிறது.

மதச் சார்பற்ற அரசாய்த் தன்னைப் போலியாக அறிவித்துக் கொண்டு அனைத்து மதங்களுக்கான பிரச்சாரத்தையும் அது ஏற்றுக் கொண்டது.

இந்தியப் பார்ப்பனிய அரசக் கட்டமைப்பு, பார்ப்பனிய வருணத் திமிரொழுக்கத்தை மதப் போர்வையில் தொடர்ந்து வரும் குமுக மாற்றங்களுக்கு ஏற்ப நிலை நிறுத்திக் கொள்ள முனைகிற போதெல்லாம் - அதற்கு இசைவான பிரச்சார உத்திகளையே பயன்படுத்திக் கொண்டது.

ஏவுகணை (Rocket), வானூர்திகள் என்று அறிவியல் வளர்ந்து வரும் நிலையில், பிள்ளையார் பால் குடிப்பது என்பதும், தொடர்வண்டிகள் பேருந்துகள் புதிதாய்த் தொடங்கப்படுகையில் வேள்வி நடத்தித் தொடங்குவது என்பதும், ஒரு தொழிலகத்தை, நிறுவனத்தைத் தொடங்குகையில் மதவழிபாடு என்கிற பிரச்சாரங்களை அனுமதிப்பதும் - ஹிந்துத்துவ உணர்வை நிலைப்படுத்திக் கொள்ளவே ஆகும்.

இத்தகைய பிரச்சாரங்கள் - மதப்பரப்பல்கள் என்கிற பொருளோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. இந்துப் பார்ப்பனியத்தைத் தக்கவைத்துக் கொள்வதையும், அதன் வழி இந்துஸ்தானை வலுப்படுத்திக் கொள்வதையுமே நோக்கமாய்க் கொண்டுள்ளது. பல்வேறு ஒடுக்குமுறை அழுத்தங்களிலிருந்து தன் தேசிய உரிமைகளுக்குப் போராடும் இந்தியாவிற்குள் அடக்கப்பட்டிருக்கிற பல்வேறு தேசிய இன எழுச்சிகளை அடக்குவதற்கும்,அந்தந்தத் தேசிய

www.tamilarangam.net

இன ஒற்றுமையைச் சிதைப்பதற்கும் இன்றைய மதப் பிரச்சாரங்கள் இந்தியக் கட்டமைப்புக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

எனவே பிரச்சாரங்கள், பரப்பல்கள் என்கிற அளவோடு நிற்பதில்லை. அவை வணிகவழிப் போட்டியாய்க் காட்டப்பட்டு மதக் கலவரங்களையும் தூண்டிவிடுகிறது.

'ஹிந்துக் கடைகளிலேயே பொருள்கள் வாங்கு!"

"நாலு நாலு எட்டு

துலுக்கன கண்டா வெட்டு

துலுக்கச்சிய கண்டா கட்டு"

- என்கிற வெறியூட்டல்கள் - இந்துஸ்தானை வலுப்படுத்துவதற்கான கீழ்த்தரமான பரப்பல் முயற்சிகளே.

தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள், வானொலிகள் இவற்றின் வழியே ஒருபக்கம் - ஹிந்துஸ்தானிய, ஹிந்து வருணத் திமிரொழுக்கத்தைப் பரப்பல் செய்து கொண்டே - மதச் சார்பின்மை பற்றியும், மத நல்லிணக்கம் பற்றியும் விளம்பரம் செய்யப்படுகிற உத்திகளையே அரசு பின்பற்றுகிறது.

இருக்கிற சமூக அவலங்களுக்கு, ஏற்றத்தாழ்வுகளுக்கு, உழைப்பும் உற்பத்தியும் இருந்தும் ஏழ்மை நிலவக் காரணங்களான வல்லரசிய ஆளுமையை, சுரண்டலை மறைத்துவிட்டு முசுலீம்கள்தாம் எதிரி என்பது போலவும், பிற மதங்கள்தாம் காரணம் என்பது போலவும் திசை திருப்புகிற ஹிந்துத்துவப் பார்ப்பனிய வல்லரசியக் கூட்டின் சூழ்ச்சியே இன்றைய மதக் கலவரங்களாக இருக்கிறது. அதற்கு அடிகோலுவதே மதப்பிரச்சாரங்களாக

www.tamilarangam.net

அமைகின்றது.

ஆக - கடவுள் பற்றிய பொய்ம்மைக் கருத்தும் இக்குமுக இயங்கியல் போக்குகளும் அறிவியல் வழிப்பட்டு மக்கள் அளவில் ஊன்றி வளர்க்கப்படுகிற காலம் வரை கடவுள் பற்றிய கருத்தும் அது மதவழிப்பட்டு இருப்பதாக உணரப்படுகிற நடைமுறையும் அவரவர்கள் தனிக் கருத்துகளாக இருந்திடல் வேண்டுமே அல்லாமல் அது பிரச்சாரப்படுத்தப்படுவது என்பது அரசக் கட்டமைப்பை யும் ஆதிக்க வெறித்தனத்தையும் நிலை நிறுத்தவும், அக்கட்டமைப்பு மீண்டும் மதங்களைப் பயன்படுத்தி இம் மக்கள் எழுச்சிகளை முனை மழுக்குகிற போக்குகளே உருவெடுக்கும்.

எனவே, மதவழிப்பட்ட பிரச்சாரங்களை முற்றிலுமாக நிறுத்தாமல், அதற்கு எதிராகப் போராடாமல் ‘மத நல்லிணக்கம்’ என்பதும், மதவெறி மாய்ப்போம் - என்பதும், மதத்தை அரசக் கட்டமைப்பு உறவோடு - அதன் ஆளுமைக்குத் துணை செய்வதாய் பார்க்காமல், வெறுமனே கடவுள் கருத்துப் பரப்புவதாய்த் தனித்துப் பார்க்கிற மேலோட்டப் பார்வையே ஆகும்.

குடி குடியைக் கெடுக்கும் என்று மதுக் கடைகளில் எழுதி மாட்டுவதான பொய்ம்மை வரிகளாகவே மத நல்லிணக்கம் என்பதும், மதவெறி மாய்ப்போம் என்பதும் அமையும்.

அரசு அரசின் தொடர்புடைய நிறுவனங்கள் வழி மதமும், மதம் சார்ந்த கடவுள் கருத்துகள் - பிரச்சாரப்படுத்தப்படுவதும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துகிறதான மதவழிக் கடவுள் சிலை ஊர்வலங்கள், ஒலிபெருக்கிவழிப் பரப்பல்கள் போன்றவை அனைத்தும்

www.tamilarangam.net

நிறுத்தப்படவேண்டும். கடவுள் வழிபாடு என்பது அவரவர்களின் தனிப்பட்ட கருத்தாகவே அமைதல் வேண்டும்.

வருண அடிப்படையில் ஆரியப் பார்ப்பனிய ஆளுமை அரசியலே ஹிந்துஸ்தான் என்கிற இந்தப் பாரத இந்தியாவை உருவாக்கவும், அதை ஆளுமை செய்வதுமான பொற் காலத்தைக் கொண்டு வருகிற வெறிமுயற்சியையே அது தொடர்ந்து செய்து வருகிறது. எனவே அது பல்முனை களிலும் கருத்து செலுத்தித் தம் ஆளுமையை நிலை நிறுத்துவது ஒன்றையே நோக்கமாகக் கொண்டியங்கு கின்றது.

எனவே, இந்தியாவின் அரசியல் உறுதிப் பாட்டுத்தன்மையை நிலைநிறுத்துவதற்கான முக்கியக் கூறாக மதமே இருக்கிறது. பண்பாடு, மொழி, அரசியல் என்று எதை எடுத்தாலும் மதவழித் தொடர்புடையதாகவே மாற்றப்படுகிறது. எனவே இக் குமுக மாற்றத்திற்கான உழைக்கும் மக்களின் அணிதிரட்சிக்குச் சாதி ஒரு பெருந் தடைக்கல் எனில், மதம் அதைப் போர்த்திக் காக்கும் கவசமாகவே இருக்கிறது.

எனவே, ஆரியப் பார்ப்பனியத்தின் மதவழிப்பட்ட இந்துஸ்தானிய முகத்தைக் கிழிக்கிற முயற்சியில்லாமல் மதப்பிரச்சார எதிர்ப்புவழி, மதவழிப்பட்ட இந்தியக் கட்டமைப்பை எதிர்க்காமல் சாதி ஒழிப்புப் போரைக்கூட முன்னெடுக்க முடியாது. சாதி ஒழிப்புப் போரை இணைக்காமல் ஹிந்துத்துவப் போர்வையில் உயிர்க்கும் இந்திய ஆரியப் பார்ப்பனியத்தை வேரறுக்க முடியாது.

ஆக, உழைக்கும் மக்களின் வகுப்பு எழுச்சிப்

www.tamilarangam.net

போராட்டத்திற்கான கூறுகள் ஹிந்துத்துவ மதத் திரையைக் கிழித்தெறிகிற போராட்டத்தையும், ஆதிக்கச் சாதிவெறி ஒழிப்புப் போராட்டத்தையும் உள்ளடக்கியது.

ஆயினும், இந்துத்துவத்தை - ஹிந்துஸ்தானியத்தை எதிர்ப்பதானால், மாய நிலையில் எதிரியாக்கப்பட்டிருக்கிற இஸ்லாமியரை எழுச்சிகொள்ள வைப்பதிலிருந்தோ, அல்லது இஸ்லாமியருக்கோ, பிற மதத்தினருக்கோ ஆதரவாய் நிற்பதிலிருந்தோ அல்ல.

மாறாக, இந்துத்துவத்தால் - அதன் இந்தியக் கருத்துருவாக்கத்தால் ஒடுக்கப்படுகிற சாதிய ஒடுக்குமுறைகளிலிருந்து அவற்றைத் தோலுரிப்பதேயாகும். இந்துத்துவம் என்பது மதமாய் மட்டும் நின்று இசுலாத்தையோ, பிற மதங்களையோ எதிரியாகக் காட்டவில்லை. அது தானே உருவாக்கிய ஹிந்துஸ்தானிய அதாவது இந்தியப் போர்வைக்குள் ஒளிந்து கொண்டு அவற்றை எதிரிகளாகக் காட்டுகின்றன. எனவேதான் அது கிறித்தவர்களையும் இசுலாமியரையும் தேச விரோதிகள் என்றும், மதம் மாறியிருப்போரைத் தேசத் துரோகிகள் என்றும் தொடர்ந்து இட்டுக்கட்டிக் கூறி வருகின்றது.

எனவே - வெறுமனே இந்து மதத்தை எதிர்க்கையில் - அது ஹிந்துஸ்தான் என்கிற இந்தியாவிற்குள் ஒளிந்து கொள்ளுகிறது.

எனவே வெறுமனான இந்துமத எதிர்ப்புக் கருத்துகள் தோல்வியையே தழுவுகின்றன.

இந்துத்துவம் என்பது மட்டுமே பார்ப்பனியம் அல்ல. இந்துத்துவம் தான் உருவாக்கிய ஹிந்துஸ்தானின் நிழலில் நிற்கிற வகையிலேயே பார்ப்பனியம் உயிர்க்கிறது. இரண்டும்

www.tamilarangam.net

ஒன்றுக்கொன்று மாறி மாறி நிழல் கொடுத்துக் கொள்ளுகிற வகையில் ஆரியப் பார்ப்பனியம் தம் ஆளுமையை வகைப்படுத்தியிருக்கிறது.

இசுலாமிய எதிர்ப்பைக்கூட இன்றைய இந்துத்துவ அமைப்புகள் முன்னிறுத்துகையில் அவை ஹிந்துஸ்தான் என்கிற இந்தியாவைத் துண்டாடத் திட்டமிட்டிருக்கின்றது என்பதாகச் சொல்லியே எதிர்மைப்படுத்துகின்றது.

அவ்வாறான திட்டம் அவ் அமைப்புகளுக்கு இல்லாது போனாலும், காசுமீரின் தேசியச் சிக்கலை - இசுலாத்தின் பிரிவினைவாதச் சிக்கலாகத் திரித்து எதிர்ப்பதுபோல் - மற்ற பகுதிகளிலும் இதையே செய்கிறது.

எனவே, இந்துஸ்தான் என்கிற இந்தியக் கட்டமைப்பை எதிர்க்காத சிறுபான்மை மதங்களின் உரிமைக் கோரிக்கைகள்கூட இந்துத்துவத்தால் விழுங்கப்படுபவையே.

எனவே, ஆரியப் பார்ப்பனியம் தன் ஆளுமைக்காக இரு பெரும் கடமைகளை மேற்கொண்டிருக்கிறது. அது இந்துத்துவத்திற்காக இந்தியாவையும், இந்தியாவுக்காக இந்துத்துவத்தையும் உறுதி செய்து, தன் ஆளுமையைக் கட்டிக் காப்பது என்பதே.

எனவே, அந்தக் கடமைக்குத் துணை செய்கிற வல்லரசியங்களின் துணை அதற்குத் தேவைப்படுகிறது. தம்முடைய இந்தியம் இந்துத்துவத்திற்கு எந்தக் கேடும் வராத வகையில் அது வல்லரசிய உறவுகளை மேற்கொள்ளுகிறது.

மேலும், இவ் ஆளுமை கட்டிக் [illegible] வேண்டுமான நிலையிலேயே அவை அண்டை நாடுகளை

www.tamilarangam.net

அரவணைக்கவும், எதிர்மைப்படுத்தவும் செய்கின்றன.

இவ்விரண்டின் காப்பு நிலையில் உறவு கொண்டிருக்கிற வல்லரசிய நாடுகளின் உறவு சிதையாமல் இந்துத்துவ - இந்தியா தம் அயலுறவு அரசியலை ஒழுங்கமைத்துக் கொள்ளுகிறது.

இன்றைக்குச் சீனாவை எதிர்ப்பதும், பாக்கிஸ்தானைக் கண்டிப்பதும் இலங்கையுடன் உறவு கொள்ளுவதும், தமிழீழத்துக்குத் துணைபோவதுபோல் காட்டுவதும் பிற அனைத்தும் இத்தகைய அயலுறவு அரசியலின்படியே.

கிறித்தவத்துக்கு வணிக - வல்லரசிய வகுப்புப் பின்னணி இருப்பதால் அது இந்துத்துவத்தைக் கடுமையாக எதிர்க்காமலும் இந்தியத்தை அரவணைத்துக் கொண்டும் இயங்குகின்றது.

இஸ்லாத்துக்கு மதவியல் சார்ந்த பின்னணியே கூடுதலாக இருப்பதால் அது தன் மதத்தில் இறுக்கமான நடைமுறையைக் கொண்டிருக்கிறது.

வல்லரசியச் சாய்காலில் வளரும் கிறித்தவத்திற்கோ, தமக்குச் சாதகமான கல்வி முறையை, பண்பாட்டு முறையை, வாழ்வியல் முறைகளைச் சொல்லுவது அல்லது திணிப்பது என்பது கட்டாயமாகின்றது. எனவே அது பள்ளிக்கூடங்கள் அமைப்பது, மருத்துவமனை நிறுவுவது போன்ற பல பொது நிறுவனப் பணிகளுடன் தம்மை இந்தியத்துக்குள் தக்கவைத்துக் கொண்டது.

இஸ்லாத்துக்கு மதவியல் கடந்த வல்லரசியச் சுரண்டல் பின்னணி இல்லாததால் இத்தகைய அமைப்பு முறைகளை அது கூடுதலாகச் செய்து கொள்வதில்லை.

www.tamilarangam.net

எனவே, வல்லரசியப் பின்னணியான கிறித்தவத்தை எதிர்ப்பதிலும், மதவியல் பின்னணி உள்ள இஸ்லாத்தை எதிர்ப்பதிலும், இந்துத்துவமும், இந்தியாவும் இருவகை நடைமுறையை மேற்கொள்ளுகின்றன.

இது கிறித்தவ எதிர்ப்பைப் பொதுமைப்படுத்தி நிறுத்துவதோடு கூர்மையற்றதாக்கி மறுபுறத்தில் இஸ்லாத்தை மத அளவீட்டில் கடுமையாக எதிர்மைப் படுத்திக் காட்டுகின்றது. இந்தியாவும் இந்துத்துவமும் அதன்வழி இந்துத்துவத்தைக் கட்டமைத்துக் கொள்ளுகின்றன.

ஆக, இங்கு நமக்குத் தெளிவுபடுவது ஆரியப் பார்ப்பனியம் தன் ஆளுமைக்கான அரசியலாக இந்துத்துவத்தை வைத்திருப்பதும் அது இந்தியாவை உருவாக்கிக் கொண்டதோடு இவற்றை வாழ்விக்கிற வல்லரசிய உறவில் இருந்து கொண்டிருக்கிறது என்பதுமே ஆகும்.

இவற்றில் எந்த ஒன்றையும் தனித்து நாம் எதிர்த்திட இயலாது. ஒன்றின் எதிர்ப்பு - மூன்றின் எதிர்ப்போடு அடங்கியதாகவே இருக்க முடியும்.

ஒன்றை நாம் எதிர்க்கத் தொடங்குகையில் மற்றவை நம்மின் முயற்சிகளை அடக்கி ஒடுக்குகின்றன.

எனவே, மூன்றினையும் இணைத்து எதிர்க்கிற வகையில் அரசியலை நாம் வகைப்படுத்திக் கொள்வதே சரியானதாக இருக்க முடியும்.

இந்நிலையில்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழகத்தில் இடைநிலைச் சாதிகளை அரவணைத்துக் கொண்டு இந்துத்துவம் காலூன்றுகிற முயற்சியைச் செய்யத் தொடங்கியுள்ளது.

பார்ப்பனிய ஆச்சாரங்கள் இல்லாமல் திருமணங்கள் இல்லை; குடும்பவியல் நிகழ்ச்சிகள் இல்லை என்பதை ஏற்றிருக்கிற இடைநிலைச் சாதியர்களின் இத்தகைய அடிமைப் போக்கு ஆரியப் பார்ப்பனியம் இந்துத்துவத்தை அவர்களிடம் வேரூன்ற வைக்க எளிய வழியாகப் போய்விட்டது.

ஆர்.எஸ்.எஸ்., 'இந்து முன்னணி, விசுவஹிந்து பரிஷத்' பஜ்ரங்தள், சிவசேனை போன்ற இந்துத்துவத்தின் அமைப்புகள் எல்லாவற்றுக்கும் பார்ப்பனிய ஆச்சாரங்களை உயிராக மதிக்கிற இன்றைய இடைநிலைச் சாதியர்களே தலைமையில் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். ஒவ்வொரு அமைப்புக்கும் ஒவ்வொரு இடைநிலைச் சாதியர் அமர்த்தப்பட்டிருப்பதன்வழி அந்த அந்தச் சாதியினரை இந்துத்துவம் தன் கட்டுக்குள்ளேயே வைத்திருக்கிறது.

இதன்வழி அந்த அந்த இடைநிலைச் சாதியரின் ஆதிக்கச் சாதிய வெறித்தனத்தைக்கூட நியாயப்படுத்து கிறது.

தாழ்த்தப்பட்டோரின் மீது ஆதிக்கச் சாதியரின் வெறியாட்டம் சரி என்பதான நிலையிலே இந்துத்துவம் ஏற்பதாக இறுமாப்புக் கொள்ள வைக்கிறது.

தாம் இவ்வகையில் புறக்கணிக்கப்பட்டதற்கு வருந்தித் தம்மையும் இந்துத்துவப் பார்ப்பனியத்துக்குள் இணைக்க மாட்டார்களா எனத் தாமே வலிய பார்ப்பனியர்களின் காலில் விழும்படியான தாழ்த்தப்பட்ட மக்களுக்கான அமைப்புகளின் தலைவர்களை உருவாக்குகிறது,

www.tamilarangam.net

இந்துத்துவம்.

ஆக, சாதிவழி ஆதிக்கவெறியால் உயிர்ப்பித்துக் கொண்டிருக்கும் இந்துத்துவத்தையும், தேசிய் இனங்களின் மீதான ஒடுக்குமுறையில் உயிர்ப்பித்துக் கொண்டிருக்கும் இந்தியாவையும், சாதி ஒழிப்பு அரசியலையும் தேசிய இன விடுதலை அரசியலையும் இணைத்து முன்னெடுப்பதன் வழியாகவே வீழ்த்திட முடியும்.

இந்தியாவைத் தேசிய இன எழுச்சி அரசியலே வீழ்த்த முடியும் என்பது போல, இந்துத்துவத்தை அதை வாழ்விக்கும் வருணத் திமிரொழுக்கத்தோடு இணைந்த சாதிய அதிகாரத்தை, சாதி ஒழிப்பு எழுச்சி அரசியலே வீழ்த்த முடியும்.

பார்ப்பனிய ஆச்சாரங்களையும், ஆதிக்கச் சாதிய வெறித்தனங்களையும் சாதிக்கொரு நீதி என்பதையும் வீழ்த்துவதே இந்துத்துவத்தின் வீழ்ச்சியாக இருக்க முடியும்.

ஆக,

- **மதப்பிரசாரம் ஒழித்திடுவோம்!**
  **மனித நேயம் வளர்த்திடுவோம்!**
- **பார்ப்பனிய ஆச்சார ஒழிப்பும்**
  **ஆதிக்கச் சாதி வெறி எதிர்ப்புமே**
  **இந்துத்துவத்தை அழிக்கும்!**
- **தேசிய இன எழுச்சியே**
  **பார்ப்பனிய இந்தியத்தை வீழ்த்தும்!**
  **வல்லரசியத்தை விரட்டும்!**

www.tamilarangam.net

- ஆக இத்தகைய அரசியலை முன்னெடுப்பதே சரியான வழியாக இருக்க முடியும்.

இவ்வகையில் அல்லாமல் இந்துத்துவத்தை வெறும் மதமாகக் கருதிக் கொண்டு எதிர்ப்பது என்பது ஹிந்துத்துவத்தை மட்டுமல்ல இந்தியத்தையும், வல்லரசியத்தையும் வாழ்விக்கவே செய்யும்.

அத்தகைய போக்கே இன்றைக்குச் சிறுபான்மை இசுலாமியர்களிடம் இருக்கிறது.

எனவே, தமிழக இஸ்லாமியர்களையும், பிற கிறித்துவ, பௌத்த, சமண, சைவ, வைணவ போன்ற அனைத்து மதத்தினரையும் இவ்வகைப்பட்ட அரசியல் வழிப்படுத்தாமல் இருப்பது இந்துத்துவத்தை - இந்தியத்தை வாழ்விப்பதன் வழி நம் அரசியலுக்கே வீழ்ச்சியைத் தரும்.

எனவே, அச் சிறுபான்மை மதத்தினரை இவ்வகை அரசியல்படுத்தி, அவரவர்களின் உரிமைக்கு முழங்க வைப்பதும், பார்ப்பனிய ஒழிப்பும், ஆதிக்கச் சாதி வெறி ஒழிப்புமே இத் தமிழக உழைக்கும் மக்களின் விடுதலைப் போராட்டப் பாதையாக இருக்க முடியும்.

★